# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குடியாத்தம், வேலூர் மாவட்டம்.

**முன்னிலை : திரு.சி.செந்தில் குமார், பி.காம்., பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2018ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ம் நாள் புதன்கிழமை

## அசல் வழக்கு எண் 72/2016

மைந்தன் ... வாதி

// எதிராக //

கங்காதுரை (எ) இன்பராஜ் ... பிரதிவாதி

இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக என் முன்பாக கொண்டு வரப்பட்டு, வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.வ்.குமார், எம்.ஏ.,பி.எல்., அவர்களும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.சுப்பிரமிண, எம்.ஏ.,பி.எல்., அவர்களும் முன்னிலையான நிலையில், இவ்வழக்கு வாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்ட நிலையில் பிரதிவாதி முன்னிலையாகாத நிலையில் பிரதிவாதியை தோன்றா தரப்பினராக கருதி, வாதி தரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

தாவா சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள தாவா சொத்தில் வாதி நிம்மதியான முறையில் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதற்கு பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ யாரும் இடையூறுகளும், தொந்திரவும் எதுவும் செய்யக்கூடாதென பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர தடையுறுத்து கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் இவ்வழக்கு செலவுத் தொகை கோரியும் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>வாதியின் வழக்குரையின் சுருக்கம்:-</u>**

தாவா சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள சொத்தானது வாதியால் கடந்த 12.09.1979-ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின்படி ஒரு துலக்கானத்தாள் என்பவரிடமிருந்து கிரயம் பெறப்பட்டு, அந்த சொத்தில் வாதி ஒரு வீடு கட்டிக்கொண்டு எவ்வித இடையூறுகளும் இடைஞ்சல்களுமின்றி அனுவித்துக்கொண்டு வருகிறார். தாவா சொத்திற்கு அருகில் 4 அடி அகலம் 18 அடி நீளம் கொண்ட

இடத்தை பொது சந்து வழியாக விட்டுள்ளார். தாவா சொத்திற்கு வடக்கு பக்கத்தில் பிரதிவாதி குடியிருந்து வருகிறார். தாவா சொத்தினை பொறுத்து அனைத்து வருவாய் ஆவணங்களும் வாதி பெயரில் உள்ளன. இந்நிலையில் கடந்த 14.03.2016-ம் தேதி பிரதிவாதி தாவா சொத்தான பொது சந்து வழியை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்ததை வாதி அவரது உறவினர்களின் உதவியுடன் தடுத்து நிறுத்திவிட்டு, அது குறித்து வாதி அவரது வழக்கறிஞர் மூலம் கடந்த 18.03.2016-ம் தேதியில் பிரதிவாதிக்கு ஒரு சட்ட அறிவிப்பினை அனுப்பினார். மேற்படி சட்ட அறிவிப்பினை பிரதிவாதி கடந்த 22.03.2016-ம் தேதியில் பெற்றுக்கொண்டு எவ்விதமான பதில் அறிவிப்பும் அனுப்பாமல் உள்ளார். பிரதிவாதி அரசியல் பலம் கொண்டவர் என்பதால் மீண்டும் சொத்தினை அபகரிக்க முயற்சிப்பார் என்பதால் வாதியால் இந்த தாவாவை தாக்கல் செய்ய நேரிட்டது. எனவே, தாவா சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள தாவா சொத்தில் வாதியின் நிம்மதியான அனுபவத்திற்கு பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ யாரும் எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாதென பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர தடையுறுத்து கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் இவ்வழக்கு செலவுத் தொகை கோரியும் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. **<u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் வழக்குரையின் சுருக்கம்:</u>**

வாதியின் வழக்கு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. வாதியால் இந்த தாவாவில் சொல்லப்பட்ட சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை. இப்பிரதிவாதியால் எற்றுக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர இதர சங்கதிகள் அனைத்தையும் வாதியே நிரூபிக்க வேண்டும். உண்மையில் இப்பிரதிவாதியின் சொத்திற்கு பின்பக்கத்தில் வாதியின் சொத்து உள்ளது. தாவா சொத்து முழுவதிலும் வாதி வீடு கட்டிக்கொண்டுள்ளதால் காலி இடம் எதுவும் கிடையாது. மேற்படி காலிஇடம் யார்யாருக்கு பொது வழி என்பது குறித்து வாதி தாவாவில் தெரிவிக்கவில்லை. அந்த பொது வழியை பிரதிவாதி எக்காலத்திலும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்பதால் வாதியின் சட்ட அறிவிப்பிற்கு பதில் அனுப்பவில்லை. இப்பிரதிவாதியின் பெயரானது வாதி தாவாவில் சொல்லியபடி கங்காதுரை (எ) இன்பராஜ் அல்ல, கங்காதரன் என்பதே சரியான பெயர் ஆகும். வாதியின் தாவாவில் சொல்லியுள்ள சொத்து விவரம் தவறானது ஆகும். இப்பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தின் ஒரு பகுதியாக 2 அடி அகலம் கொண்ட சொத்தை வாதி தான் ஆக்கிரமித்து வீடு கட்டிக்கொண்டுள்ளார். மேற்படி விவரங்களை மறைத்துவிட்டு தாக்கல் செய்துள்ள வாதியின் தாவா நிலைக்கத்தக்கது அல்ல. எனவே வாதியின் இவ்வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4.இவ்வழக்கில் வழக்குரை மற்றும் பதில் வழக்குரை ஆகியவற்றின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தில் கீழ்க்காணும் எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன:-

**எழுவினாக்கள்:- (18.11.2016)**

1. வாதி தாவாவில் கோரியுள்ளவாறு நிரந்தர தடையுறுத்து கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?
2. வேறு என்ன பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது?

5. இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி வா.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**எழுவினா 1:-**

6.இவ்வழக்கில் வா.சா.ஆ.1ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணமானது தாவா சொத்தை வாதி கடந்த 12.09.1999-ம் தேதியில் கிரயம் பெற்றுள்ளார் என்பதற்கான மேற்படி கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்பதும், வா.சா.ஆ.2 ஆவணமானது தாவா சொத்தை பொறுத்து 22.03.2016-ம் தேதியில் குடியாத்தம், சார் பதிவாளரால் வழங்கப்பட்ட வில்லங்கமில்லா சான்றிதழ் என்பதும், வா.சா.ஆ.3 ஆவணமானது தாவா சொத்தை பொறுத்து வாதியின் பெயரில் 17.03.2016-ம் தேதியில் செலுத்தப்பட்ட வீட்டு வரி ரசீது என்பதும், வா.சா.ஆ.4 ஆவணமானது மின்கட்டண அட்டை என்பதும், வா.சா.ஆ.5 ஆவணமானது கடந்த 18.03.2016-ம் தேதியில் வாதியின் வழக்கறிஞரால் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் என்பதும், வா.சா.ஆ.6 ஆவணமானது மேற்படி சட்ட அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை என்பதும் தெரியவருகிறது. இந்நிலையில் வாதி தரப்பு சான்றாவணங்கள் மற்றும் தாவாவின்படி தாவா சொத்தில் வாதியின் நிம்மதியான அனுபவத்திற்கு பிரதிவாதியோ அவரது ஆட்களோ முகவர்களோ பணியாட்களோ யாரும் எவ்விதமான இடையூறு செய்யக்கூடாதென பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர தடையுறுத்து கட்டளை பரிகாரம் வழங்கக்கோரி வாதியால் இந்த வழக்கு தொடரப்பட்டு பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அதனை பெற்றுக்கொண்ட பிரதிவாதியால் பதிலுரை தாக்கல் செய்யப்பட்ட பின்னர் வாதியின் வழக்குரை மற்றும் பிரதிவாதியின் பதிலுரையை கருத்திற்கொண்டு இவ்வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டு, வாதி தரப்பில் வாதி

முதல் விசாரணை செய்த பின்னர் மேற்படி வாதியை குறுக்கு விசாரணைக்காக பல வாய்தாக்கள் கடந்த நிலையில் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையை அனுசரித்தும் வாதியை குறுக்கு விசாரணை செய்து இந்த வழக்கை எதிர்வழக்காடும் வகையில் இந்நீதிமன்றத்தில் ஆஜராக முன்வரவில்லை. இவ்வழக்கின் வழக்குரை சங்கதிகளை உறுதிப்படுத்தி வாதி வா.சா.1 சாட்சியாக சாட்சியமளித்துள்ளார். வாதி தனது வழக்கை உரிய சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையில் நிருபித்துள்ள நிலையில் தாவா சொத்தினை பொறுத்து பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையை அனுசரிக்கும் வகையில் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி வாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்து எதிர் வழக்காட முன்வரவில்லை. எனவே, வாதி இந்த தாவாவில் கோரியுள்ளவாறு பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர தடையுறுத்து கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று எழுவினா 1-க்கு வாதிக்கு ஆதரவாக விடை காணப்படுகிறது.

**எழுவினா 2:-**

7.இந்த வழக்கில் மேலே கண்ட எழுவினா 1-ல் விரிவாக தீர்வு காணப்பட்டுள்ளதால் வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் இந்த வழக்கில் கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 2-க்கு விடை காணப்படுகிறது.

முடிவாக, வாதியின் தாவா அனுமதிக்கப்பட்டு வாதி கோரியவாறு தாவா சொத்தில் வாதி நிம்மதியான சுவாதீன அனுபவத்தில் இருந்து அனுபவித்து வருவதற்கு பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, முகவர்களோ, பணியாட்களோ யாரும் எவ்விதமான இடையூறுகளும் இடைஞ்சல்களும் செய்யக்கூடாதென பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர தடையுறுத்து கட்டளை பரிகாரம் வழங்கி வழக்கு செலவு தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் விரிவாக தட்டச்சு செய்யப்பட்டு அது என்னால் படித்து பார்த்து பிழை திருத்தம் செய்யப்பட்ட பின் 2018ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ம் நாளான இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்) சி.செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.

**<u>வாதி தரப்பு சாட்சிகள்:-</u>**

வா.சா.1 கே.மைந்தன்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 12.09.1979 | கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 22.03.2016 | வில்லங்கமில்லா சான்றின் அசல் |
| வா.சா.ஆ.3 | 17.03.2016 | வீட்டு வரி ரசீதின் அசல் |
| வா.சா.ஆ.4 | ---- | மின் கட்டண அட்டை |
| வா.சா.ஆ.5 | 18.03.2016 | சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.6 | ---- | அஞ்சலக ஒப்புகை அட்டை |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்:-</u>** இல்லை

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**:- இல்லை

(ஒம்) சி.செந்தில்குமார்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.